IN THE COURT OF ADDITIONAL DISTRICT JUDGE,

TENKASI.

**MCOP.No. 30/2022**

**நாள்– 23.04.2025**

**ம.சா.1 திருமதி. பாப்பாத்தி** – சாட்சி இன்று மீண்டும் அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதிக்கப்படுகின்றார்.

**1ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்குவிசாரணை**

நான் விபத்தை நேரில் பார்க்கவில்லை என்றால் சரியல்ல. நான் எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் விபத்தை நேரில் பார்த்ததாக சொல்லவில்லை என்றால் சரிதான். எனது கணவர் பீடி சுற்றும் தொழில் செய்துவந்தார், கூலிவேலைக்கும் செல்வார். மேற்படி விவரங்களை எனது மனுவிலும், நிரூபண வாக்குமூலத்திலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பீடி சுற்றும் நபர்களுக்கு கம்பெனியில் இருந்து ஒரு பாஸ்புக் கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதில் எவ்வளவு பீடி சுற்றப்பட்டுள்ளது, அதற்கு எவ்வளவு தொகை வழங்கப்பட்டுள்ளது என்ற விவரம் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அந்த பாஸ்புக்கை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். அதை பார்த்தால் தான் எனது கணவர் பீடி சுற்றும் வேலை மூலமாக எவ்வளவு வருமானம் ஈட்டினார் என்ற விவரம் தெரியவரும் என்றால் சரியல்ல. எனது கணவர் பீடி சுற்றவில்லை என்றும், கூலிவேலை செய்யவில்லை என்றும் மனுவிற்காக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

விபத்து நடந்த சாலையானது குறுகிய சாலை என்றால் சரியல்ல. அது வளைவான சாலை என்றால் சரிதான். அந்த சாலையின் ஓரம் தான் எனது கணவர் பீடிசுற்றிக்கொண்டிருந்தார். விபத்து சமயத்தில் மழை பெய்துகொண்டிருந்தது என்றால் சரிதான். விபத்து நடந்த சாலையில் பேவர் பிளாக் பதிக்கப்பட்டிருந்தது என்றால் சரிதான். விபத்து ஏற்படுத்திய கார் அருகிலிருந்த டீக்கடையில் மோதி அதன் பிறகு எனது கணவர் மீது மோதியது

என்றால் சரிதான். அதன்காரணமாக டீக்கடையின் அடுப்பு சேதமாகியிருந்தது. அங்கு வேறு யாருக்கும் காயம் இல்லை. 1ம் எதிர்மனுதாரருக்கு விபத்து சமயத்தில் ஓட்டுநர் உரிமம் இருந்ததா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

2ம் மனுதாரர் முருகேஸ்வரிக்கு எனது கணவர் இறப்பதற்கு முன்னரே திருமணமாகிவிட்டது என்றால் சரிதான். முருகேஸ்வரி தற்போது அவரது கணவர், குழந்தைகளுடன் புங்கம்பட்டியில் வசித்துவருகிறார். என் கணவர் மீது மோதிய வாகனம் கார் என்று மட்டும்தான் தெரியும், அது என்ன வகையான கார் என்று எனக்கு தெரியாது. அந்த கார் தெற்கிலிருந்து வடக்குநோக்கி வரும்போது விபத்து ஏற்பட்டது.

எனது கணவரின் குடும்பத்தினர் 90 வயது வரை உயிர் வாழ்ந்தார்கள் என்பதை காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவரின் வருமானத்தையோ, வயதையோ காட்டுவதற்கு நான் எந்த ஆவணமும் தாக்கல்செய்யவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்தவுடன் எனது கணவரை சிகிச்சைக்காக ஹைகிரவுண்ட் அரசு மருத்துவமனைக்கு அழைத்து சென்றோம். அதுகுறித்து எனது மனுவில் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். விபத்து நடந்த பகுதியில் மழை பெய்த காரணத்தினால் சாலையில் பதிக்கப்பட்டிருந்த பேவர் பிளாக் வழுக்கும் தன்மையுடன் இருந்தது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. விபத்து சமயத்தில் சாலையின் குறுக்கே ஒரு மாடு வந்த காரணத்தினால் கார் ஓட்டுநர் வாகனத்தை திருப்பியபோது, எனது கணவர் மீது மோதிவிட்டது என்றால் சரியல்ல. விபத்து நடந்த சமயம் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றும், அதனால் விபத்து எப்படி நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

இந்த வழக்கில் சாலையை அமைத்த வட்டார வளர்ச்சி அலுவலரையோ, நெடுஞ்சாலைத்துறை அதிகாரிகளையோ நான் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். இந்த விபத்து கார் ஓட்டுநரின் கவனக்குறைவால் ஏற்படவில்லை என்றும், சாலை சரிவர பராமரிக்கப்படாத காரணத்தினால் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரர் நிதானமாக

சாலைவிதிகளை கடைபிடித்து வாகனத்தை ஓட்டிவந்தார் என்று சொன்னால் சரியல்ல. அந்த விபத்திற்கு முன்னர் எனது கணவருக்கு வேறு எந்த நோயாவது இருந்ததா என்றால் இல்லை, சிறிது இளைப்பு நோய் மட்டும் இருந்தது, அதுவும் மாத்திரை, மருந்து சாப்பிட்டு குணமாகிவிட்டது. 1ம் எதிர்மனுதாரர் அவரது உரிமையாளருக்காக காரை ஓட்டிவந்தார் என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரர் அவரது உரிமையாளருக்காக காரை ஓட்டிவந்ததால் 2ம் எதிர்மனுதாரர் தான் எனக்கு இழப்பீடு வழங்கவேண்டும் என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டு தொகை மிகையானது என்றால் சரியல்ல. 1ம் எதிர்மனுதாரரை பொறுத்து மனு தள்ளுபடிசெய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>**மறுவிசாரணை இல்லை**</u>

MANOJKUMAR S

Digitally signed by MANOJKUMAR S
Location: Additional District and Sessions Judge, Tenkasi